MINISTRY OF LAW
SINGAPORE

# வாடிக்கையாளர்களுக்கு ஓர் அறிவிப்பு

## விலையுயர்ந்த கற்கள் மற்றும் விலையுயர்ந்த உலோகங்கள் (கள்ளப்பணத்தை நல்ல பணமாக்குவதும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதும் தடுப்பு) சட்டம் 2019 (PSPM சட்டம்)

ஏப்ரல் 2019ல், சிங்கப்பூர் கள்ளப்பணத்தை நல்ல பணமாக்குவதையும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதையும் ஒடுக்கும் PSPM சட்டத்தை நிறைவேற்றியது. இந்தச் சட்டவிரோத நடவடிக்கைகளை எதிர்க்கச் சிங்கப்பூர் மேற்கொள்ளும் ஒட்டுமொத்த முயற்சிகளை வலுப்படுத்துவது இச்சட்டத்தின் நோக்கம்.

ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட அனைத்து விற்பனையாளர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் இதில் முக்கிய பங்குண்டு.

## நீங்கள் என்ன செய்யவேண்டும்?

PSPM சட்டத்தின்படி விற்பனையாளர்கள் வாடிக்கையாளர்களிடம் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

உங்கள் அடையாளத்தைச் சரிபார்ப்பதும் பத்திரங்களின் பிரதிகளை வைத்துக்கொள்வதும் இதில் உள்ளடங்கும். பத்திரங்களில் பின்வருவன உள்ளடங்கும்:

- அடையாள அட்டை
- கடவுச்சீட்டு
- அரசாங்கம் வழங்கிய மற்ற வகையான அடையாளப் பத்திரம் (புகைப்படம் உள்ளது)

ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட விற்பனையாளர்கள் பின்வரும் விவரங்களையும் கேட்கக்கூடும்:

- தொடர்பு விவரங்கள்
- தொழில்
- பணவசதியின் மூலம்
- நிதியின் மூலம்

## நீங்கள் அடையாள விவரங்களைக் கொடுக்காவிட்டால் என்ன நடக்கும்?

ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட விற்பனையாளரால் உங்களது அடையாள விவரங்களைப் பெற இயலாவிட்டால், அவர் சட்டப்படி பரிவர்த்தனையைப் பூர்த்தி செய்யக்கூடாது.

அதோடு, உங்களுடன் செய்திருக்கக்கூடிய பரிவர்த்தனையை அவர் ரத்துச் செய்யவேண்டும்.

## எனது விவரங்கள் என்ன செய்யப்படும்?

ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட விற்பனையாளர்கள், தனிநபர் தகவல் பாதுகாப்புச் சட்டம் 2012ன்படி, சேகரிக்கப்பட்ட விவரங்களைப் பாதுகாக்கவேண்டும்.

மேல்விவரம் அறிய அன்புகூர்ந்து acd.mlaw.gov.sg பார்க்கவும்.

சட்ட அமைச்சின் (கள்ளப்பணத்தை நல்ல பணமாக்குதல் / பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தடுப்பு) இணையத்தளத்தைப் பார்வையிட QR குறியீட்டை வருடவும்.



பிப்ரவரி 2020 நிலவரப்படி